பதினேழாவது

# சித்தாந்த சைவ மாநாட்டு மலர்

## திருவெண்ணெய்நல்லூர்

Name of Hara Encompass
World be free from suffering
www.shaivam.org

கீலக – புரட்டாசி – விசயதசமி

Name of Hara Encompass
World be free from suffering
www.shaivam.org

## திருவாவடுதுறை ஆதீனம்

1—10—1968

வெளியீடு எண் 236.

உ
சிவமயம்

# உற்சவ விளக்கம்

(உரையுடன்)

இது

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது.

திருவாவடுதுறை ஆதீனம்
1968

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

Name of Hara Encompass
World be free from suffering
www.shaivam.org

உ

சிவமயம்

# முகவுரை

சிவாலயங்களில் நடைபெறும் வழிபாட்டுமுறை நித்தியம் எனவும் நைமித்திகம் எனவும் இருவகைப் படும். அவற்றுள் நித்தியமாவன உஷக்கால முதல் (விடியற்காலபூசை அல்லது திருவனந்தல்) அர்த்த யாமம்வரை நடைபெறும் ஆறுகால பூசைகளுமாம்.

சிவலாயத்தில் அனுட்டிக்கப்பெறும் ஆகமவிதிகளுக்கும், மக்களின் சிரத்தைக்கும், பத்திக்கும், கோவிலின் செல்வநிலைக்கும் ஏற்ப ஐந்து, நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று காலங்கள் நடைபெறுவதும் உண்டு. இவற்றின் விரிவையும், விதிமுறைகளையும் அகோரசிவாசாரியர் இயற்றிய ஆகமசாரமாகிய பிரதிட்டாதி உற்சவாந்தம் என்ற கிரியாகிரமத்யோதிகை என்னும் நூலிலும், பின்பு பலரால் எழுதப்பட்ட நித்திய பூசாசங்கரகம் முதலிய நூல்களிலும் காணலாம்.

அந்நூல்களில் இன்னகிரியை இன்னதற்குப்பின் இவ்வாறு செய்க என விதிமுறைகளைக் காணலாமேயன்றி, அவற்றின் பயனையும் அடிப்படைத் தத்துவங்களையும் அவை ஞானம் பயத்தற்கு வாயிலாதலையும் நேரே அறிய ஒண்ணாது. இது நிற்க,

நைமித்திக பூசை என்பது நித்திய பூசையில் அறிந்தோ அறியாமலோ நேரும் மந்திரலோபம், தந்திர லோபம், சிரத்தாலோபம், திரவியலோபம் முதலான குறைகளால் விளையும் பாவங்களைப் போக்க இயற்றப் படும் சிறப்புப்பூசை. இதனையே 'சிறப்பொடு பூசனை' என்பர் திருவள்ளுவர். உற்சவம், திருவிழா என்பன இதன் மறுபெயர்கள். உற்சவங்களில் நித்தியோற்சவம், பக்ஷோற்சவம், மாதோற்சவம், அயனோற்சவம், மகோற்சவம் முதலிய வேறுபாடுகள் உள்ளன. அவை யன்றி, விஷு கார்த்திகை பூரம் முதலிய நக்ஷத்திரங் களிலும் நாட்களிலும் விழாக்கள் நிகழ்வது உண்டு. இவையனைத்தும் வெறும் கிரியை அன்று. இவற்றின் செயல் முறைகளையும், அவற்றால் மக்கள் எய்தும் பயனையும், ஞானசாத்திரங்களையும், இயைத்து நோக்கி எல்லாவற்றையும் ஞானமயமாகக் காணுதல் சிவாகம சீலர்களின் கடமையாகும்.

அந்நிலையில் உற்சவ விளக்கம் என்னும் இந்நூல் மகோற்சவத்தின் விதிகளை ஓரளவு தொகுத்துச் சுட்டி, மிருத்சங்கிரகண முதல் துவஜாவரோகணம்வரையுள்ள நிகழ்ச்சிகள், மக்கள் அடையும் தேக அந்தக்கரணசுத்தி முதல் பாசக்ஷய மலபரிபாக சிவத்வவியாப்தி வரை உள்ள அநுபவங்களாதலை நன்கு விளக்கிச்செல்கிறது.

இது இருபத்திரண்டு ஆசிரிய விருத்தங்களால் அமைந்தது. இதனை இயற்றியவரின் பெயர் அறியக் கூடவில்லை. ஆயினும் மூன்றாவது குருமூர்த்திகளாகிய ஸ்ரீ அம்பலவாணதேசிகரவர்கள் செய்தருளியது என்று மரபுவழிச் செய்தி கேட்கப்படுகிறது.

உற்சவங்களைப் பற்றிய இத்தகைய நூல் மிகவும் இன்றியமையாதது. இம்முறையை ஒட்டி யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் உரைநடையில் ஒரு நூல் எழுதியிருக்கிறார்கள். அனைத்தையும் ஒப்புநோக்கி இந்நூலுக்குப் பொழிப்புரையும், விளக்கமும் அடியேனால் எழுதப்பெற்றன.

22-வது ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் விஜயதசமி மலராக இந்நூல் வரவேண்டும் என்றுத் திருவுளம் பாலித்தார்கள். அங்ஙனமே மலப்பகையை வென்று ஞானவெற்றியை எய்தும் நன்னாளிலே, ஞான தளபதியாக விளங்கிய மெய்கண்டார் சந்நிதியிலே, நடைபெறும் சித்தாந்த மாநாட்டிலே இந்நூல் வெளிவருகிறது. இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஞானச்செங்கோலாட்சியில் மலர்ந்த பல மலர்களுக்குள் சிறந்த மலர் இது. இதனை ஞானவாணியின் திருவடிக்கண் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்,

ஆதீன மகாவித்துவான்,

**ச. தண்டபாணி தேசிகர்.**

திருவாவடுதுறை,
*10—9—68.*

Name of Hara Encompass
World be free from suffering
www.shaivam.org

## குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

உ

சிவமயம்

# உற்சவ விளக்கம்

ஆடக மன்றி லேறி
அம்மையுந் தானு மாக
நாடக நடிக்கும் போது
நல்லவர் சிவானந் தத்தே
வீடகம் புக்கு லாவி
விரைமலர்த் தாளை மேவிப்
பாடக மான பாசம்
பாறுமென் றறையு மன்றே.

நாலு பாதங்களிலே சரியாதரற்குத் திருவடிபெறுவது காரியமாக, நாலு காரியமும் பொருந்திய சாம்பவமென்னுந் தீக்கையே உற்சவமானது. இது பத்து நாளாகக்கொண்டது; காரியம் பத்தையும்உடையதான படியினலே. இதிலே நின்ற பதத்திற்குரியோர் அதற்கேற்ற முத்தியைப் பெறவும், அல்லாதார்க்குச் சத்திநிபாதமுண்டாகவும் காரணமாம். இதற்கு உதாரணம் கூறுகின்றது.

## உற்சவம் உயிர்கள் முத்தியின்பம் உறுதற்கே எனல்

உற்சவ விளக்கந் தன்னை
உரைத்திடி லுயிர தற்கு
முற்சென னங்கள் விட்ட
முகிழ்த்ததோர் கருணை யாலே
தற்பரந் தரும மாய
தனிக்கொடி கட்டி யுண்மைச்
சிற்பரத் துயிர்கள் முத்தி
சேர்ந்திடச் செய்வார் மன்னே. 1

இதன் பொருள் :- சிவபெருமான் திருக்கோயில் கடோறும் திருவிழாக் கொண்டருளும் அடிப்படைத் தத்துவ விளக்கங்களைச் சொல்லுமிடத்து, உயிர்கள் முன் முன் பிறவிகளிற் கருதிய பயனை எய்தாது, விட்டமையால் விளைந்த காரணமில்லாக் கருணையாலே, தற்பரமாகிய சிவம் தருமஸ்வரூபமான ஒப்பற்ற இடபக்கொடியைக்கட்டி என்றும் அழியாத உண்மையான ஞானசொரூபமேயான பரம்பொருளிடத்தில் முத்தியின்பத்தை எய்தச்செய்தருளுவர் என்றவாறு.

ஆன்மாக்கள் முத்தியின்பம் பெற இறைவன் கொடி கட்டி உற்சவம் கொண்டருள்கின்றார் என்பது கருத்து.

முற்செனனங்கள் விட்ட கருணை; முகிழ்த்ததோர் கருணை எனக்கூட்டுக. உயிர்கள் பல பிறவிகளை எடுத்தெடுத்து வினைப்போகங்களைஉண்டு உண்டு, மலவலி குன்ற அதனால் விளைந்த பரிபாகத்தால் உண்டான சிவகருணையால் என்க. தற்பரன் - மேலானவற்றிற்கு

எல்லாம் மேலான பரசிவம். இறைவன் கொடி இடபக் கொடி. இடபம் தருமஸ்வரூபம்; ஆதலால் தருமமாய தனிக்கொடி என்ருர்.

சிற்பரம்-ஞானமேயான பரம்பொருள். உண்மைச் சிற்பரம் - என்றும் மாருத அழியாத நித்யானந்தமய மான பரசிவம் என்க.

**சண்டாளர்களை உய்விக்கவே உற்சவங்கள்**

சாதிசண் டாளர் பொல்லாக்
கன்மசண் டாள ரென்னும்
போதமி லுயிர்கள் தம்மைக்
கதியினில் போக்க வேண்டி
ஓதருங் கருணை யாலே
உமையவ ளோடுங் கூடி
ஆதிபொய்ப் பாச நீக்க
அவுத்திரி தொடங்க லுற்ருர். 2

இ - ள்: சாதி சண்டாளரும் பொல்லாத கன்ம சண்டாளர்களுமான அறிவற்ற ஆன்மாக்களை நற்கதி யிற் செலுத்துவதற்காக, அவர்கள் மீது எழுந்த கருணையாலே, உமாதேவியாரோடும் கூடி முதற் கடவுளாகிய சிவம், அழிந்துபடுவனவாகிய அவர்களு டைய பாசங்களை நீக்கி அருள ஒள்த்திரி என்னும் யாகத்தைத் தொடங்கலுற்ருர் என்றவாறு.

சண்டாளர்களை உய்விக்க எண்ணியே இறைவன் உமையோடு உற்சவங்கொண்டருளுகிருர் என்பதாம்.

சாதி சண்டாளர் - பிறப்பாலே சண்டாளராஞேர். அவர்கள் கொலைத்தொழிலும் புலைப்பொசிப்பும் உடை யோர். கன்மசண்டாளர் - உயர்சாதியில் பிறந்தும்

பிறந்த குலத்திற்குரிய நித்தியகன்மானுட்டானங்களைப் புரியாது விட்டமையால் சண்டாளத்தை வருவித்துக் கொண்டோர். இவர்கள் அவர்களினும் கொடியர் ஆதலின் பொல்லாக் கன்மசண்டாளர் என அடை கொடுத்துச் சிறப்பித்தார்கள் என்க.

போதம் - ஞானம். ஞானமிருக்குமாயின் சாதியால் சண்டாளர்கள். ஆயினும் திருநாளைப் போவாரைப் போல பரிபாகப்பட்டு உய்ந்திருப்பர். கன்மசண்டாளர்களாவாரும் போதமிகுப்பின் ஆத்திரேயன் முதலானோர் போலச் சண்டாளத்துவம் நீங்கியிருப்பர். அங்ஙனம் உய்யும் உபாயத்தை ஒருக்காலும் சிந்தியாதவர்கள் என்பார் இவர்களைப் போதமில் உயிர்கள் என்றார்.

கதி - அடையப்படுவதாகிய முத்தி. ஆதி - சிவ பரம்பொருள். அவுத்திரி - யாகத்தைக் குறிப்பதாய்ப் பின் யாகத்தை முன்னிட்டுத் தொடங்கும் விழாவைக் காட்டியது.

## யாகசாலையில் பூசிக்குமுறை

யாகமண் டபத்தி லெய்தி
யெழிறரு குண்டஞ் செய்திட்(டு)
ஆகவே திகையின் மீதே
யைவகைக் கலைநி றுத்தி
யோகமா யாதி யாய
ஒன்பது கும்ப மர்ச்சித்(து)
ஏகமா மீசர் கண்ணே
கும்பவத் தனையி ருத்தி. 3

இ - ள்: யாகமண்டபத்தை அடைந்து, அழகிய யாககுண்டத்தைச் செய்து, ஆக்கிய வேதிகையின்

மீது பஞ்ச கலைகளையும் ஆவாகனஞ் செய்து, அதில் யோக மாயை முதலாக ஒன்பது கும்பங்களை வைத்து, அர்ச்சனை செய்து, ஏக பரம்பொருளான இறைவன் இடத்தில் வைத்த கும்பத்தில் 'எழுந்தருள வேண்டும்' எனக் கும்பவர்த்தனையாக எழுந்தருளச்செய்து என்றவாறு.

யாகமண்டபத்தில்குண்டம் வேதிகைகளையமைத்து, வேதிகையில் பஞ்சகலைகளையும் ஆவாகனம் செய்து, ஒன்பது கும்பங்களை வைத்து அதில் யோகமாயை முதலான சத்திகளை ஆவாகனம்செய்து அருச்சித்து, சிவபெருமானிடத்துக் கும்பவர்த்தனையாக இருக்கச் செய்து என்க.

இப்பாடல் குளகம்.

## திக்குபந்தனம் அங்குரார்ப்பணம் முதலியன செய்தல்

இந்திர னாதி யாய தேவதா திசைக ளெட்டில்
வந்தனை செய்து மற்றத் தேவர்கள் வணக்க மாக்கி
முந்திய பாலி தன்னின் முளையினை யாக்கி எட்டாம்
சுந்தர மங்க லங்கள் தோரண மாலை செய்து. 4

இ - ள்: இந்திரன் முதலான தேவர்கள் காக்கும் திசைகள் எட்டிலும் அவர்களைப் பூசித்து, அத்தேவர்களை அங்கங்கே வணங்கி, முந்தியே பாலிகைகளில் முளைகளை நிறைத்து, அட்டமங்கலங்கள், தோரணங்களின் வரிசை இவைகளை வைத்து எ - று.

இந்திரதிசை முதலான எட்டுத் திசைகளிலும் அவ்வத்தேவர்களை ஆவாகனஞ்செய்து மகோற்சவம் முடி

யும்வரையில் சாக்கிரதையாகப் பாதுகாத்து இருங்களென வேண்டிப் பூசித்து வழிபாடாற்றிப் பாலிகைகளில் முளைகளை நிரப்பிப் பூசித்து, அங்குரார்ப்பணம் செய்து அட்டமங்கலப் பொருள்களையும் தோரண வரிசைகளையும் அமைத்து என்பது.

இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் முதலான திக்குப் பாலகர்களைப் பூசித்து காக்க எனப் பந்தனம் செய்தலாம்.

அட்டமங்கலங்கள்: கண்ணாடி, சுவஸ்திகம், பூரண கும்பம், சாமரை, தீபம் முதலியன.

ஆலயம் வலமாய் வந்திட்
டருட்கொடி யேற்று வித்து
மேலுளோர் மண்ணு ளோர்கள்
விழவணி செய்வ தற்குச்
சாலவாக் கினைக்கேட் பித்துத்
தழன்மிகு மியாக சாலை
பாலினை யெய்தி மங்கை
பங்கனார் பயின்றி ருந்து. 5

இ-ள்: கோயிலை வலமாக வந்து, திருவருள்மயமான கொடியை ஏற்றுவித்து, தேவர்களும் மக்களும் விழாவிற்கு நகரை அலங்கரிப்பதற்காக மிக்க உத்தரவைப் பறைசாற்றி, மக்களைக் கேட்கச்செய்து அக்கினி சொலித்துக்கொண்டிருக்கும் யாகசாலையில் புகுந்து, உமாதேவியை ஒரு பாகத்துக் கொண்ட இறைவனாரைத் தியானித்திருந்து என்றவாறு.

கொடியேற்றி, அனைவர்க்கும் நகரை அலங்கரிக்க ஆணைதந்து யாகசாலையில் சிவபெருமான் திருவருளை சிந்தித்திருந்து என்க.

## ரட்சாபந்தன விதி கூறுகிறது

காப்பணி கரத்திற் சேர்த்திக்
கனலினைக் குண்டத் தாக்கிப்
பூப்பயில் பூசை செய்து
புனிதனை விடா திருத்தி
நாட்பயில் பலிக டூவி
நல்லவத் திரமுன் போக்கிச்
சேப்பயில் கொடியார் வீதி
திருவுலாச் செய்ய லுற்றார் 6

இ - ள் : ஆபரணம் போன்ற சிறப்பினதாய காப்புகட்டி, அக்கினியை ஓமகுண்டத்தில் எழுப்பி, பூக்களால் யாகாக்கினியைப் பூசித்து, சிவபெருமானை அதில் ஆவாகனம்செய்து, நாடோறும் பலிகள் தூவி, நல்ல தூய்மையான ஆடையை முன்னே செலுத்திப் பிரதட்சிணம் செய்வித்து, கொடியேற்றிப் பின்பு இடபக்கொடியை உடைய சிவபெருமான் திருவுலா வந்தனர் என்றவாறு.

ரட்சாபந்தனம், யாகாக்கினி, உத்தீபனம், சிவ பிரதிட்டை முதலியனவும் செய்து யாகாக்கினியைப் பூசித்து, துவஜத்தைக் கிராமபிரதட்சணம் செய்வித்து ஏற்றிப் பின்னர் இறைவன் வீதியுலாவந்தார்.

## விழாக்களால் விளையும் பயன்

அற்றைநாண் மூல மாகும்
பகுதியை யகற்று வித்துப்
பிற்றைநாள் வினையி ரண்டாம்
பெரும்பிணி யுலாவிப் போக்கி

மற்றைமூன் ரும்வி ழாவின்
முக்குண மாள்வ தாகக்
கற்றைவார் சடையெம் மண்ணல்
கலந்துலாச் செய்ய லுற்றார். 7

இ - ள்: அன்று இறைவன் திருவுலா வந்து ஆன்மாக்களின் மூலப் பிரகிருதியாகும் பிரகிருதி மாயையை அகற்றி, இரண்டாம்நாள் வீதியுலாவந்து நல்வினையும் தீவினையுமாகிய இருவினை நோய்களைப் போக்கி, மூன்றாம்நாள் விழாவிலே சாத்துவிகம் ராஜசம் தாமசம் என்ற மூன்று குணங்களும் அழியும்படியாகச்செய்து, நீண்ட ஜடாபாரத்தையுடைய எம் அண்ணலாகிய சிவபெருமான் திருவீதிக்கண் உலாப் போந்தார் என்றவாறு.

கருத்து வெளிப்படை.

இதுவும் அது.

சீரணி நாலா நாளாஞ்
சிறந்ததோர் விழாவு தன்னில்
காரண மாய வந்தக்
கரணமோர் நான்க கற்றி
வாரணி கொங்கை யோடு
மதிபொதி சடையெம் மண்ணல்
ஊரணி வீதி தன்னில்
உலாவரத் தொடங்க லுற்றார். 8

இ - ள்: சிறப்பமைந்த நாலாம்நாள் விழாவிலே வினைப்போகங்கட்குக் காரணமான அந்தக்கரணங்கள் நான்கையும் நீக்கி, கச்சணிந்த கொங்கையையுடைய உமாதேவியாரோடும் சந்திரசேகர மூர்த்தியாகிய

Name of Hara Encompass
World be free from suffering



www.shaivam.org

எம்மண்ணல் ஊரிலே அழகிய வீதியிலே உலாவரத் தொடங்கினார் என்றவாறு.

அந்தக்கரணங்கள் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன. இவற்றை உயிர்கட்கு நீக்க, அதாவது பாசங்களினின்றும் வினைப்போகத்தினின்றும் நீக்கித் தன்னையே காணச்செய்ய நான்காம் நாள் விழாக் கொண்டார் என்பதாம்.

ஐவகைத் தினம்வி ழாவில்
　　ஐம்பொறி யகற்றி யாறாம்
உய்வகை விழாவி னுக்கு
　　முற்றுலா வுலாவிப் போந்து
மெய்வகை மந்தி ரங்கள்
　　எழுவகை மேல தாகத்
தெய்வநற் றேரி லேறித்
　　திருவுலாச் செய்ய லுற்றார். 9

இ - ள் : இதுவுமது.

ஐந்தாம்நாள் விழாவிலே ஐம்பொறிகளின்சேட்டைகளை அகற்றி, ஆறாம்நாள் விழாவிலே கிராமம் முழுவதும் உலாப்போந்து, சப்தகோடி மகாமந்திரங்கட்கும் மேலாகத் தெய்வத்தன்மை பொருந்திய நல்ல தேரில் ஏறித் திருவுலாச் செய்தனர்.

இதுவுமது.

மன்னிய கலாதி யேழும்
　　ஆணவ மலமு மாயத்
தன்னியல் வேட்டை யாடுந்
　　தன்மையுட் கொண்டு நாதன்

சின்மயக் குடிலை வில்லுஞ்
சிற்பரை யம்புஞ் சேர்த்திப்
பன்னெடுங் கருவி தோற்றப்
பகையற உலாவ லுற்றார். 10

இ-ள்: நிலைபெற்ற நிவிர்த்தாதி கலைகள் ஏழும் ஆணவமலமும் கெடத்தனக்கே இயல்பான வேட்டையாடுந் தன்மையைத் திருவுளத்தமைத்து, பரமேசுவரன் ஞானசொரூபமான பிரணவ வில்லையும், சிற்சத்தியாகிற அம்பையும் தாங்கி, வேறும் பல சூலம், கட்கம், பாசம், கேடயம்முதலிய கருவிகள் தோற்றப் பகையறவே ஒழிய உலாவினர் என்றவாறு.

## நடராசர் விழா

ஆணவச் சேட்டை யாய
திரோதம தகற்ற வேண்டிப்
பேணிய காப்பு நாணும்
பெருகிய ஞானக் காவல்
பூணணி கரத்திற் சேர்த்துப்
பூரணா வின்ப வுண்மைத்
தாணுநா டகத்தி னோடுந்
தனிவிழாச் செய்ய லுற்றார். 11

இ-ள்: ஆணவமலத்தின் குறும்பாகிற திரோதானமலத்தை அகற்றுவதற்காக, ஆகமங்களாற் போற்றப்பட்ட ரக்ஷாபந்தனமாகிய பெருகிய ஞானரட்சையை வளை முதலியன அணிந்த கையில்சேர்த்து, எங்கும் நிறைந்த இன்பமயமான உண்மைப்பொருளாகிய சிவம் நாடகத்தோடு ஒப்பற்ற திருவிழாவைக் கொண்டருளினர் என்றவாறு.

நடராசர்க்குத் தனியே காப்புநாண் கட்டி உலா வரச்செய்தல் மரபு. ஆதலின் இங்ஙனம் கூறினர்.

## திருச்சாந்தணிதல்

அயன்முத லாக மீதாம்
பரசிவ மதீத மாக
உயரவே பதங்கண் மாற்றி
ஓங்கொளி ஞானக் கூத்தில்
நயமிகு பேரா னந்த
நல்லுயிர் களிப்பப் பாசச்
சயமுறு நித்த மாகச்
சாந்தம தணிந்து கொண்டு. 12

இ-ள்: பிரமன் முதலாகப் பரசிவம் ஈறுன மேலுள்ள பதங்களை மாற்றி அவற்றினும் அதீதமாக உயர்ந்துள்ள சோதிவடிவான ஞான நடனத்தால் விளைந்த நன்மை மிகுந்த பேரானந்தம் பெற்று சுத்தான்மாக்கள் களிக்கவும் அவர்களுக்குப் பாசக்ஷயம் நிலைத்து விளங்கவும் திருச்சாந்து அணிந்துகொண்டு என்றவாறு.

ஆகவே திருச்சாந்தணிதல் உயிர்கள் மல நீக்கம் பெற்று நித்தியானந்தப் பெருவாழ்வு எய்தவும், பாசக்ஷயம் நிலைபெறவும் என்பதாம்.

## நடராசர் வீதியுலா வருதலின் பயன்

பாசம்போ யழிவு மின்பப்
பரசிவ வரவு முண்மை
நேசநல் லுயிர்கள் பேறு
நிலைமைய தாகக் காட்டி

வீசிய கரமு முத்தி
விங்கிய பதமுங் காட்டித்
தேசுலாந் திருவெ ழுச்சித்
திருவுலாச் செய்ய லுற்றார். 13

இ - ள் : பாசம் கெட்டொழிதலும் இன்பமய மான பரசிவத்தின் தோற்றமும் உண்மையன்பு கொண்ட உயிர்கள் அடையும் பேறும் என்பதை யுணர்த்தி வீசியகரமும் முத்தியின்பத்தை அளிக்கும் திருவடியும் காட்டி ஒளிமிக்க திருவெழுச்சித் திருவுலாவைப் புரிந்தார் நடராசப்பெருமான் எ - று.

பாசக்ஷயமும் சிவப்பேறும் ஆன்மாக்கள் அடையத் தக்கன என்பதை உணர்த்தி ஒரு கையை வீசி நின்றும் திருவடியைத் தூக்கிநின்றும் ஆடும்பெருமான் திருவீதி உலாக்கொண்டருளினார் என்பதாம்.

இதுவுமது.

உற்றிடுஞ் சுகாதீ தத்தின்
உண்மையை அளிக்க வேண்டித்
தற்பர ஞட கத்தின்
தன்மையே தன்மை யாகச்
சிற்பர வுபாதி யோகத்
திருவுலாப் புறம தாக
நிர்க்குண மதீத மாக
நிலைமையி லுலாவ லுற்றார். 14

இ - ள் : உயிர்களுக்கு, அடையத்தக்க ஆனந் தாதீதத்தின் உண்மைத்தன்மையை உதவுதற்காக,

தற்பரசிவம், தாம் நடிக்கும் நாடகத்தின் தன்மையே தன்மையாக, ஞானமயமான உபாதி யோகமான உலாப்புறமாக குணரகிதமான அதீத நிலையே தன் உண்மை நிலையாக திருவுலாப்போந்தார் எ - று.

அவர் புரியும் திருவுலாப்புறம் ஞானமயமானது. குணாதீதமான நிலையே தன் உண்மை நிலை. இங்ஙனம் உயிர்கள் உணர்ந்து ஆனந்தாதீதத்தில் அழுந்த உலாப்போந்தார் என்பதாம்.

சுகம் :- உயிர் உள்ளுணர்வான் பொறிகள் வாயிலாகப் புலன்களிற் பொருந்தி நுகர்வதால் விளையும் பயனும், மனனுணர்வால் அறிவில் அனுபவமாக நுகர்வனவும் என இருவகை. அவற்றுள் முன்னது அற்ப சுகம் எனப்படும். பின்னது பேரின்பம் எனப்படும். அவற்றுள் பேரின்பமும் உயிர் உணர்வதாய், மனன் கருவியாய் இருக்க விளைவதாகலின், பரசிவம் அச்சுகத்தையும் கடந்து உணர்ந்தார்க்கும் உணர்வரிதாயிருத்தலின் சுகாதீதம் எனப்படும். அச்சுகாதீதம் 'இங்ஙன் இருந்ததென்றுந் தீபற; இயம்ப அரியதென்றுந் தீபற' எனச் சிவன் உணர்த்தினலன்றி உணர வாராதாகலின், அவ்வுண்மையை அளிக்கவேண்டித் தற்பரசிவம் நடிக்கின்றது என்பது. அந்நடனம் நிர்க்குணம் அதீதம் என்பதாம்.

சிற்பர உபாதியோகத்திருவுலா :- அறிவே அறிவாய் அறிவு அறிந்து இருப்பதொரு செயலும் உபாதியாய்ச் சிவத்தோடு ஒன்றியிருத்தலின் அது சிற்பர உபாதியோகமாயிற்று. அதுவே உலாப்போதலின் உண்மைக் கருத்துமாயிற்று என்பதுணர்த்தியவாறு.

## பேரானந்த நடம் பெருமான் நடம் என்பது

வாதனை யாக நின்ற
    ஆனந்த னனந்த மான
நாதனு முடிவி லாடு
    நாடகங் காட்டி வீதி
போதரு மருளி னாலே
    பூரணப் பேரா னந்தம்
வேதகம் விளக்கி யின்ப
    விமலனார் விளங்க லுற்றார். 15

*இ - ள் :* இதுவரை பூவிருக்கும் பெட்டகம் போல வாசனைமாத்திரமாய் ஆன்மாவினிடம் விளங்கிக்கொண்டிருந்த ஆனந்த சொரூபியானவரும், எல்லை கடந்தவருமான பரசிவம், எல்லாம் தம்மகத் தொடுங்கி இருக்கிற காலத்தில் ஆடும் பரமானந்த நடனத்தைக்காட்டி, திருவீதியிலே உலா வருகின்ற கருணைப் பெருக்காலே, நீக்கமற நிறைந்த பேரானந்தமே ஆன்மாவின் களிப்பைப் போக்கும் வேதகமாக விளங்குதலைக் காட்டி, இன்பமயமான விமலனார் சிற்சபாநாதராக விளங்கினார் என்றவாறு.

பரசிவம் பரமானந்த நடனஞ்செய்து, சிவானந்தானுபவமே சீவன் பரிபாகநிலையில் எய்துதற்குரியது என்பதை வீதியுலாப்போந்து விளக்கி அருளினர் என்பது கருத்து.

வாதனை - வாசனை. ஆனந்தனாகிய நாதன் என்க. வேதகம் - ஒருலோகத்தை ஒருலோகமாக்கும் பச்சிலையல்லது குளிகை. நடராசமூர்த்தி உலாப்போதருஞ் செயலே வேதகமாய் ஆன்மாவின்களிம்பை அறுத்துக் களிப்பு உதவியது என்றவாறும்.

## தீர்த்தம் ஆடுதலின் தத்துவம்

தனுவொடு கரண மாயா
புவனபோ கந்த விர்க்கும்
புனிதநீ ருய சுண்ணம்
போதகற் களித்திட் டுண்மை
இனிதமர் சிவம தாக்கி
எல்லையொன் றில்லா வின்ப
அனுபவ தீர்த்த மாடி
யமலமாய் நிலைமை செய்தார். 16

இ - ள்: தனு கரண புவன போகங்களைப் போக்கும் புனிதமயமான திருநீற்றுச் சுண்ணத்தைப் போதகனுகிய பரிபாகிக்குஉதவி, சத்தான இன்பமான சிவமாக்கி, எல்லையேயில்லாத சுகானுபவமாகின்ற தீர்த்தத்திலே முழுகி மலம் நீங்கப்பெற்று, என்றும் சத்தான தன்மையையும் உதவினுர் பரசிவம் எ - று.

மாயையங்களை அகற்றித் திருநீறளித்து சச்சிதானந்த வடிவாக்கி, சிவமேயாக விளங்க ஞானியான சீவனைத் தீர்த்தமாட்டி மலம்போக்கி விளங்கச்செய்தவர் பரமகருணநிதியாகிய நடராசப்பெருமான் என்பது கருத்து.

## திக்விசர்ஜனமுதல் துவஜாவரோகணம் வரையுள்ள நிகழ்ச்சிகள்

மந்திர முதலாந் தேவர்
வகைக்குநல் விடைகொ டுத்து
விந்துரு விழந்த மோனத்
திருவுலா வீதி வந்திட்(டு)

அந்தமில் அருளி ஞலே
யருட்கொடி யிறக்கி ஞானப்
பைந்தொடி முன்ன தாகப்
பண்டுபோ லுலாவ லுற்ருர். 17

இ - ள்: சப்தகோடி மந்திரர் முதலாகவுள்ள தேவர்கள் அனைவர்க்கும் விடைகொடுத்து, அவரவர்கள் இருப்பிடத்திற்குப் போகச்செய்து விந்துவான வடிவம் இழந்த மௌனஉற்சவம் கொண்டருளி, எல்லையற்ற கருணையால் கொடியிறக்கி, ஞானம்பிகையை முன்கொண்டு வழக்கம்போல உலாவலுற்ருர் என்றவாறு.

சப்தகோடி மகாமந்திரர் முதலான தேவர்களுக்கு விடை கொடுத்து, மௌனஉற்சவம் கொண்டருளி முன்போல அம்மையுடன் உலாவலுற்ருர் என்பது கருத்து.

மௌன உற்சவம்: நாதம் விந்துவில் ஒடுங்க, விந்துவும் உருவற்று உலாவும் நிலையையுணர்த்துவதாம் என்க.

ஞானப் பைந்தொடி - ஞானசத்தி.

## அம்மை பின்னே உலா வருதலின் உண்மை

ஞானசங் கார மாற்றி
நலமிகு முயிர்க்கு முத்தி
தான்மிக வளிக்க வேண்டித்
தமோமய மான பாசத்
தீனமாந் திரோத மாற்றி
யின்பநற் சிருட்டி செய்வான்
தேனமர் குழலி பின்னே
திருவுலாச் செய்ய லுற்ருர். 18

இ - ள் : ஞானசங்காரத்தைச்செய்து, மலபரிபாகம் பெற்ற ஆன்மாக்களுக்கு முத்தியை அளிக்க இருள் வடிவான பாசத்தடையால் ஈனமான திரோதானத்தைப் போக்கி, இன்பமயமான படைப்பைச் செய்வதற்காக, உமாதேவியாரின் பின்னே இறைவன் திருவுலாப் போந்தார் என்றவாறு.

ஆன்மாக்கள் மலம் நீங்கித் திரோதமகன்று உய்ய ஞானசிருட்டி செய்வதற்காக இறைவன் அம்மை முன்னும், தான் பின்னுமாகத் திருவுலாப் போந்தார் என்பதாம்.

## திருவிழாக்களின் கால அளவும் எந்நாள் யாருக்கு உரியது என்பதும்

பத்தினே டிரட்டி யெட்டுப்
பதினெட்டுப் பத்து மூன்றும்
அத்தனர் விழாவு முத்தி
அருளினு லுரைக்குங் காலை
முத்தர்க்கு முதனு ளாகும்
முனிவரர்க் கிரண்டா நாளாங்
கத்துமா கடல்க ளுக்குங்
கருதுமூன் ருநா ளாகும். 19

இ - ள் : இருபத்தாறு நாட்களும், பதினெட்டு நாட்களும், பத்து நாட்களும், மூன்று நாட்களும் அத்தனராகிய சிவபெருமான் கொண்டருளும் விழாவைப்பற்றி முத்தியருளும் கருணையினுல் உரைக்குங் காலை, முத்தான்மாக்களுக்கு முதல் நாளும், முனிவர்

களுக்கு இரண்டாம் நாளும், ஒலிக்கிற கடல்களுக்கு மூன்ரும் நாளும் ஆகும் என்றவாறு.

முதல்நாள் விழாமுதல் முறையே முத்தருக்கும், முனிவர்க்கும், கடல்களுக்குமாக இறைவன் இயற்று வனவாம் என்பது கருத்து.

இதுவுமது.

நாலாநா ளெண்டி சைக்கும்
அஞ்சாநா டேவர் கட்கும்
மாலொடு பிரம ருத்தி
ராதியர்க் காரு நாளாம்
ஏலவார் கிரிய ளுக்கும்
ஏழாநா ளெட்டா நாட்டான்
மாலாநாற் காற்ப றவை
வனத்துளோர்க் கெனவு ரைத்தார். 20

இ - ள்: நான்காம்நாள் திசை எட்டுக்கும், அஞ்சாம் நாள் தேவர்களுக்கும், ஆரும்நாள் பிரம விஷ்ணு ருத்திரர் முதலானோர்க்கும், பொருந்தப் பெரிய மலைகளுக்கு ஏழாம்நாளும், எட்டாம் நாள் மயங்கிய விலங்கு பறவை முதலான உயிர்கட்கும், காட்டில் வாழ்கின்ற வேடர் முதலான மக்களுக்கும் ஆகும் எனச் சொன்னுர் என்றவாறு.

நான்காம்நாள் முதல் எட்டாம்நாள் வரை நிகழும் விழா திசைகட்கும், பிரமனதியர்க்கும், மலைகளுக்கும், பறவை விலங்கு வேடர் முதலானோர்களுக்கும் உரியன என முறையேகொள்க என்பது கருத்து.

## உற்சவக்கிரியைகளை நாற்பாதத்துள் அடக்கிக்காட்டுதல்

காப்புநாண் சரியை யாகும்
கருஞ்சாந்து கிரியை யாகும்
போக்கற வுலாவ ருனும்
பொலிவுடை யோக மாகும்
வாக்கினுன் ஞானு னந்தம்
மானிடர் தமக்கு மற்றத்
தேக்குள சனங்க ளுக்குஞ்
சிவமுத்தி யெனமொ ழிந்தார். 21

*இ - ள் : ரட்சாபந்தனம் சரியை. கருஞ்சாந்து அணிதல் கிரியையாகும். திருவுலாப்போதல் யோகமாகும். மந்திர செபமும், மந்திரங்களைச் சொல்லுதலும் மக்களுக்கும் தேவர் முதலிய ஏனையோர்க்கும் ஏனைய சனங்களுக்கும் ஞானுனந்தமயமான முத்தியையருளுதல் ஞானமாகும் எனச் சைவ நூல்களில் மொழிந்தார் என்றவாறு.*

ரட்சாபந்தனம் சரியை, சாந்தணிவிழா கிரியை, திருவுலா யோகம், தீர்த்தமுதல்ஏனையன ஞானம் என மொழிந்தார் என்பது கருத்து.

## உற்சவ விளக்கத்தைக் கேட்டோர் எய்தும் பயன்

கதிபெற விருளாம் பாசக்
கடலிலே கட்டுண் டோர்க்கு
முதுமைசெய் ஞான வின்ப
முத்தியை வழங்க வேண்டி

விதியினாற் றெய்வ நாளா
விழாவுவந் தானென் றுண்மை
மதிவல்லோர் உணர்த்தக் கேட்டோர்
மறுபிறப் பறுப்ப ரன்றே. 22

இ - ள்: நற்கதியைப் பெறவும், அஞ்ஞானமயமான பாசத்திலேகட்டுண்ட பேர்கட்கு, பேரறிவைச் செய்கின்ற ஞானமயமான இன்பமுத்தியை வழங்கி அருளுவதற்காகவும் சிவாகம விதிப்படித் தெய்வத் திருநாளாகத் திருவிழாவைச் சிவபெருமான் திருவுளமுவந்துகொண்டாரென்ற உண்மையைச் சிவஞானங் கைவரப்பெற்றோர் சொல்லச் சிரத்தையுடன் அதனைக் கேட்டபேர்கள் வினைவயத்தாலுளதாகும் மறுபிறப்பை அறுப்பர்; நித்தியானந்தப் பெருவாழ்வு எய்துவர் என்றவாறு.

ஆன்மாக்கள் உய்ய இறைவன் திருவிழாக்கொண்டருளுவன் என்று உண்மையுணர்ந்தோர் சொல்லக் கேட்டவர் என்றும் இன்பம் எய்துவர் என்பதாம்.

---

Name of Hara Encompass
World be free from suffering
www.shaivam.org